# சேலம் சமூக சேவை சங்கம்

SALEM SOCIAL SERVICE SOCIETY

SSSS



அனைவரும் நிறை வாழ்வு பெற....

## ஆண்டறிக்கை 2016 - 2017

# சேலம் சமூக சேவை சங்கம்

SOCIAL SERVICE SOCIETY SALEM

SSSS

# ஆண்டறிக்கை 2016 - 2017

**இயக்குனரிடமிருந்து…**

சேலம் சமூக சேவை சங்கத்தின் 2016 – 2017 ஆம் ஆண்டிற்கான அறிக்கையை தங்களிடம் சமர்ப்பிப்பதில் நான் பெருமிதம் கொள்கிறேன்.

கடந்த 49 ஆண்டுகளாக எம் நிறுவனம் ஒடுக்கப்பட்ட பெண்கள், குழந்தைகள், சிறு குறு விவசாய இளைஞர்கள், இளம் பெண்கள், காசநோயால் பாதிக்கப்பட்டோர் மற்றும் பேரிடரில் பாதிக்கப்பட்டோர் ஆகியோருக்கு நிதி உதவிகள் மூலமாக அவர்களின் வாழ்வில் மேம்பாடடையச் செய்துள்ளது.

**“இயற்கையை நாம் பாதுகாத்தால் இயற்கை நம்மை பாதுகாக்கும்”** என்பதை மனதில் கொண்டு நமது நிறுவனம் மூலமாக இளைஞர்களிடையே இயற்கை விவசாயம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துதல் மற்றும் விவசாய இளைஞர்களை ஊக்குவித்தலின் வாயிலாக இயற்கை விவசாயத்தை உருவாக்குவதை நோக்கமாக கொண்டு செயல்படுத்தி வருகிறோம்.

இந்தாண்டில், நாங்கள் எடுத்த இலக்கினை அடைய பல்வேறு செயல்திட்டங்களை திட்டமிட்டபோது எங்களுக்கு உருதுணையாக இருந்த எமது சங்கத்தின் தலைவரும், சேலம் மறைமாவட்ட ஆயாருமான மேதகு. செ. சிங்கராயன் அவர்களுக்கு எமது உள்ளம் கனிந்த நன்றிகள்.

**அருட்தந்தை. ஆரோக்கியசாமி,**

**இயக்குனர்.**

**புதிய நிர்வாக இயக்குனரிடமிருந்து...!**

மாறிவரும் இன்றைய நவீன உலகில் தனிமனித வாழ்விலும் சமுதாயத்திலும் பலவிதமான பிரச்சனைகள் காணப்படுகின்றன. இவற்றிலிருந்து நலிவடைந்த மக்களை மீட்டெடுப்பதும், அவர்களுக்கான விழிப்புணர்வை கொடுப்பதும் நம் அனைவரின் கடமையாகும். இதற்காகவே சேலம் சமூக சேவை சங்கம் அயராது உழைத்துக் கொண்டிருக்கிறது. இந்த சேவையில் நானும் இயக்குநராக பங்குபெறுவதில் பெருமிதம் அடைகிறேன்.

**“இருளை பழிப்பதை விட ஒளியேற்றுவதே மேல்”** எனும் வரிகளுக்கேற்ப இந்த சமுதாயத்தை சளித்துக் கொள்வதைவிட்டு நலிவடைந்த நெஞ்சங்களுக்கு நிறைவளிக்கவும், அடிமைபட்டுகிடக்கும் அன்பு உள்ளங்களை விடுவிக்கவும் இறைவன் கொடுத்த இந்த வாய்ப்பிற்கு நன்றி செலுத்துகின்றேன்.

சமூக சேவையின் மூலம் ஒடுக்கப்பட்ட மக்களை உரிமை வாழ்வு பெறச் செய்வதும், நலிவடைந்த மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதுமே முதன்மைக் கடமையாகக் கொண்டு செயல்படவேண்டும் என்ற நோக்குடன் சேலம் சமூக சேவை சங்கத்தில் எனது முழு பங்களிப்பையும் வழங்கிட ஆவல் கொண்டுள்ளேன்

**“கொடுப்பது சிறிதென்று தயங்காதே**

**பெறுபவருக்கு அது பெரிது....**

**எடுப்பது சிறிதென்று திருடாதே**

**இழந்தவருக்கு அது பெரிது....”**

என்பதற்கேற்ப, சமூக சேவையில் முழு பங்களிப்பைக் கொடுத்தும், பணிகளில் முழு ஈடுபாட்டுடனும், உண்மையுடனும் பணியாற்றிட வேண்டுமென அனைத்து பணியாளர்களையும் கேட்டுக்கொண்டு வாழ்த்துக்களையும், வணக்கங்களையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**அருட்தந்தை. இராஜமாணிக்கம்,**

**இயக்குனர்.**

# பொருளடக்கம்


1. **சேலம் சமூக சேவை சங்கம் - பொது தகவல்**
2. **திட்டம் சார்ந்த செயல்பாடுகள்**
   - 2.1 புதிய கண்ணோட்ட திட்டம் - VI (New Thrust – VI)
   - 2.2 கோல்பிங் இந்தியா – (Kolping India)
   - 2.3 டெ.ஃ.பி பெல்ஜிக்யூ ஆ.ஃ.ப்ரிக்கா (DBA)
   - 2.4 சாய் - அக்சயா திட்டம் (CHAI - Axshya)
   - 2.5 மானோஸ் யூனிடாஸ் (Manos Unidas)
   - 2.6 ஆயர்கள் கூட்டமைப்பு - இத்தாலியானா (BCI)
   - 2.7 காரிதஸ் அந்தோணியானா (Caritas Antoniana)
   - 2.8 காரிதாஸ் இந்தியா – உதயம் ECO DRR (Caritas India)
   - 2.9 காரிதாஸ் இத்தாலியானா (Caritas Italiana)
3. **சிறப்பு தினக் கொண்டாட்டங்கள்**
   - 3.1 கோல்பிங் தினக்கொண்டாட்டம் மற்றும் கிறிஸ்துமஸ் தினக்கொண்டாட்டம்
   - 3.2 பொங்கல் தினக்கொண்டாட்டம்
   - 3.3 பெண்கள் தினக்கொண்டாட்டம்
4. **முக்கிய தின அனுசரிப்பு**
   - 4.1 உலக கழிவறை மற்றும் நீரிழிவு நோய் தினம்
   - 4.2 உலக காசநோய் தினம்
5. **சிறப்பு நிகழ்வுகள்**
   - 5.1 **ECO DRR** உதயம் திட்ட துவக்கவிழா
   - 5.2 பிளாஸ்டிக் பயன்பாட்டை தவிர்த்தல் பற்றிய விழிப்புணர்வு
   - 5.3 தீயணைப்பு மற்றும் தீ தடுக்கும் முறை பற்றிய விழிப்புணர்வு
6. **பொதுக்குழு உறுப்பினர்கள்**
7. **பணியாளர்கள் விவரம்**

# 1.சேலம் சமூக சேவை சங்கம்

**எங்களைப் பற்றி…**

சேலம் சமூக சேவை சங்கமானது சேலத்தில் 1968ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட ஒரு இலாப நோக்கமற்ற, அரசு சாரா தொண்டு நிறுவனம் ஆகும். நாங்கள் கடந்த 48 ஆண்டுகளாக இளைஞர்கள், பெண்கள், மலைவாழ் மக்கள், சமுதாயத்தில் ஒடுக்கப்பட்ட, புறக்கணிக்கப்பட்ட வறுமைக்கோட்டிற்கு கீழே உள்ளவர்கள், பள்ளி மாணவ மாணவிகள் போன்றோர்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்துதல், பாதிக்கப்பட்டோரை வறுமைக்கோட்டிலிருந்தும், துன்பத்திலிருந்தும் மீட்டல், பெண்கள் பொருளாதார நிலையில் மேம்பாடு அடைய குழுக்களை உருவாக்கி அவர்களுக்கு பொருளாதார கடன் அளித்து சுய தொழில் செய்ய ஊக்குவித்தல் போன்றவற்றிற்காக அயராது பணியாற்றி வருகின்றோம்.


**முகவரி** : சேலம் சமூக சேவை சங்கம்,<br>19/4 கான்வென்ட் ரோடு,<br>அழகாபுரம்,<br>சேலம் - 636016


**பதிவு செய்த நாள்** : 30.01.1968

**சார் அமைப்பு** : Tamilnadu Societies Registration Act 1860

**இயக்குனர்** : அருட்தந்தை. ஆரோக்கியசாமி

**தொலைபேசி எண்** : 0427 - 2447671

**பணிபுரியும் மாவட்டம்** : சேலம்

**பணிபுரியும் ஒன்றியங்கள்** : சேலம்<br>ஆத்தூர்

கெங்கவல்லி

அயோத்தியாபட்டினம்

தலைவாசல்

மேச்சேரி

வீரபாண்டி

மேட்டூர்

ஏற்காடு

**பார்வை** : சமூக நீதி, தர்மம் மற்றும் அமைதியின் அடிப்படையில் ஒடுக்கப்பட்டவர்களாக இருக்கின்ற மிகவும் ஏழை குழந்தைகள், இளைஞர்கள், இளம் பெண்கள் மற்றும் பெண்களை திறன்மேம்பாடு அடைய செய்து சுயசார்புடையவர்களாக மாற்றுதல்.



# உ. திட்டம் சார்ந்த செயல்பாடுகள்

## உ.1. புதிய கண்ணோட்டத் திட்டம் - VI

## New Thrust - VI

தமிழ்நாடு சமூக சேவை சங்கத்துடன் இணைந்து மக்கள் அமைப்புகளை சுய சார்புடனும் தன்னிறைவுடனும் இயங்கச் செய்யும் நோக்கத்தில் **"புதிய கண்ணோட்டத் திட்டத்தை"** செயல்படுத்தி வருகின்றோம். ஐந்து கட்டங்கள் நிறைவடைந்த நிலையில் தற்போது ஆறாம் கட்டத்தில் வாழ்வாதாரம், மனித உரிமை, நலவாழ்வு மற்றும் சுற்றுச்சூழல் ஆகிய நோக்கங்களுக்கான செயல்பாடுகளை செம்மையாக செயல்படுத்தி வருகின்றோம்.

**திட்டக் கொள்கை:**

- வாழ்வாதார திறன் மேம்பாட்டு பயிற்சிகளின் மூலமாக இலக்கு மக்களின் வாழ்வாதார நிலைகளில் மேம்பாடு அடைய செய்வது.
- உரிமைசார்ந்த செயல்பாடுகளை கையிலெடுத்து சுயசார்புடன் நிலைத்த தன்மை கொண்ட அமைப்பாக மாற வழிகாட்டுவது.

**திட்டத்தின் நோக்கம்:**

- ➢ நிர்வாக வளர்ச்சி.
- ➢ வாழ்வாதாரம்.
- ➢ பிரச்சாரம் மற்றும் சட்டம் ரீதியாக ஆதரவு திரட்டுதல்.
- ➢ இலக்கு மக்களின் வாழ்வாதார செயல்பாடுகளை மேம்படுத்துதல்.
- ➢ பயிற்சிகளின் மூலமாக நலவாழ்வு மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு சார் செயல்பாடுகளில் மேம்பாடு அடையசெய்தல்.
- ➢ உரிமை சார்ந்த நிலைகளில் திறன் மேம்பாடு அடைய செய்தல்.

மேற்கூறப்பட்ட நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு புதிய கண்ணோட்டத் திட்டத்தில் கடந்த ஓராண்டில் பணியாளர்கள், மாவட்ட கூட்டமைப்பு மக்கள், ஒன்றிய மக்கள் அமைப்பின் பொறுப்பாளர்கள் மற்றும் உறுப்பினர்களுக்கு திறன் மேம்பாட்டு பயிற்சிகள் கொடுக்கப்பட்டது.

**பணியாளர்களுக்கு மற்றும் தலைவர்களுக்கான சிறப்புப் பயிற்சிகள்:**

- நீரிழிவு நோய்கான விழிப்புணர்வு பயிற்சி.
- காசநோய் விழிப்புணர்வு பயிற்சி.
- கருப்பை மற்றும் மார்பக புற்றுநோய் விழிப்புணர்வு பயிற்சி

- உடல் நலம் மற்றும் சுற்றுப்புற தூய்மைகான விழிப்புணர்வு பயிற்சி.
- இயற்கை விவசாயம் மற்றும் இயற்கை உணவு வகைக்கான பயிற்சி.
- தொழில் முனைவோர் பயிற்சி.
- வீட்டுத்தோட்டம் அமைப்பதற்கான பயிற்சி.

**செயல்பாடுகள்:**

- EPA வின் தொடர்ச்சியாக CES ( Community Enterprise schooling) சமூக தொழில் கற்றல் மையம் என்ற கையேடு பற்றிய நோக்குநிலைகளை திருமிகு. நிர்மலா அவர்கள் பணியாளர்களுக்கு எடுத்துரைத்தார்.
- நிரந்தர தொழில் மற்றும் வேலை வாய்ப்புகளுக்கான பயிற்சியினை தேர்வு செய்யும் அடிப்படையில் மக்கள் தேனீ வளர்ப்பு, இயற்கை விவசாயம் போன்ற பயிற்சிகளில் ஆர்வமாக இருப்பதை உணர்ந்து இரண்டு பயிற்சிகள் கொடுக்கப்பட்டது.
- ஆலைத் தொழிலாளர்களுக்கு தொழில் முனைவோர்கான பயிற்சியும், பெண்களின் உரிமை சார்ந்த பயிற்சிகளும் கொடுக்கப்பட்டன.
- உள்ளாட்சி தேர்தலுக்கான பயிற்சி மற்றும் பொறுப்பாளர்களின் பொறுப்புகள் பற்றிய பயிற்சிகள் கொடுக்கப்பட்டன. இந்த வருடத்தில் பல்வேறு பயிற்சிகளின் மூலம் சுமார் 1320 பயனாளிகள் பயனடைந்துள்ளனர்.

**எதிர்கால திட்டங்கள்:**

- ஆர்வமுள்ள உறுப்பினர்களை ஒன்றிணைத்து ஒத்தகருத்துடைய நபர்களை குழுவாக செயல்படச்செய்து அவர்களாகவே சுயசார்புடன் செயல்பட இட்டுச்செல்லுதல்.
- CBO உறுப்பினர்களை ஊக்கப்படுத்தி உள்ளாட்சி தேர்தலில் பங்குபெறசெய்தல்.
- பிளாஸ்டிக் மற்றும் கருவேல மரங்களை தங்களின் கிராமத்திலிருந்து அகற்ற குழு உறுப்பினர்களை வலியுறுத்தல்.

**சுய உதவிக்குழுக்கள் பற்றிய விவரம்**

| வ.எண் | ஒன்றியம் | குழுக்களின் எண்ணிக்கை | உறுப்பினர்களின் எண்ணிக்கை | 2016 - 2017 ஆம் ஆண்டின் சேமிப்பு |
|---|---|---|---|---|
| 1. | சேலம் | 86 | 1032 | 12,38,400 |
| 2. | ஓமலூர் | 2 | 30 | 36,000 |
| 3. | ஆத்தூர் | 41 | 533 | 6,39,600 |
| 4. | தலைவாசல் | 52 | 624 | 7,48,800 |
| 5. | கெங்கவல்லி | 60 | 720 | 8,64,000 |
| 6. | அயோத்தியாபட்டிணம் | 13 | 195 | 2,34,000 |
| 7. | ஏற்காடு | 5 | 75 | 90,000 |
| 8. | கொளத்தூர் | 1 | 12 | 14,400 |
| 9. | வாழப்பாடி | 1 | 20 | 24,000 |
| 10. | எடப்பாடி | 1 | 13 | 15,600 |
| 11. | தாரமங்கலம் | 1 | 13 | 15,600 |
| **மொத்தம்** | | **263** | **3286** | **39,20,400** |

**வங்கி கடன்கள்**

| வ.எண் | ஒன்றியம் | பொருளாதார திட்டம் | பயனாளிகளின் எண்ணிக்கை | தொகை |
|---|---|---|---|---|
| 1. | ஆத்தூர் | வங்கி கடன் | 125 | 45,84,000 |
| 2. | தலைவாசல் | வங்கி கடன் | 96 | 25,10,000 |
| 3. | கெங்கவல்லி | வங்கி கடன் | 169 | 44, 35,000 |
| 4. | அயோத்தியாபட்டிணம் | வங்கி கடன் | 12 | 5,00,000 |
| 5. | வாழப்பாடி | வங்கி கடன் | 24 | 6,00,000 |
| **மொத்தம்** | | | **426** | **1,26,29,000** |

## 2.2. கோல்பிங் இந்தியா

## Kolping India

**கொள்கை:**

கோல்பிங் குழுக்களை தன்னிறைவு நோக்கிய இயக்கமாக மாற்றுவது மற்றும் அதற்காக வழிகாட்டுவது.

**நோக்கம்:**

ஆன்மீகம் என்பது மதங்களை கடந்து மனிதனை அடிப்படையாகக் கொண்டது. ஆகவேதான் மனிதனை நெறிப்படுத்தவும், வளப்படுத்தவும் ஆன்மீகமும், பொருளாதாரமும் இணைந்தே இருக்க வேண்டும் என்ற நோக்கினை கொண்டு கோல்பிங் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகின்றது.

**திறன் மேம்பாடு:**

இந்த நிதியாண்டில் கோல்பிங் திட்டம் வழியாக மேற்கொள்ளப்பட்ட திறன் மேம்பாட்டு பயிற்சிகள்:

- புதிய குழுக்களை உருவாக்குதல்.
- பதிவேடு பராமரிப்பு பயிற்சி.
- தலைமைத்துவ பயிற்சி.
- தொழில்முனைவோர் பயிற்சி.
- இயற்கை வேளாண்மை பயிற்சி.
- சுகாதார கழிவறை பயிற்சி.
- எச்.ஐ.வி. எய்ட்ஸ் விழிப்புணர்வு பயிற்சி.
- தகவல் அறியும் உரிமைச்சட்டம் பற்றிய பயிற்சி.
- குடும்ப மதிப்பீடு பயிற்சி.
- வலைப்பணி தொடர்புகள் பயிற்சி.
- கருத்துருவாக்கம் மற்றும் ஆதரவு திரட்டுதல் பயிற்சி.
- வருமானம் பெருக்கு திட்ட களஆய்வு பயிற்சி.

**தாக்கம்:**

திறன் மேம்பாட்டு பயிற்சி பெற்ற கோல்பிங் குடும்ப உறுப்பினர்கள் கீழ்கண்ட நிலைகளில் வளர்ச்சி கண்டுள்ளார்கள்:

- குழுக்களை தாங்களே வழிநடத்தியும், பதிவேடுகளை பராமரித்தும், வங்கிகளுடனும் பிற அரசு துறைகளுடனும் நேரடி தொடர்பினை கொண்டுள்ளார்கள்.
- அவரவர் வீடுகளில் தங்களுக்காக உள்ள இடத்தில் வீட்டுத் தோட்டம் அமைத்து குடும்பத்திற்கு தேவையான காய்கறிகளை பயன்படுத்திகொள்கிறார்கள்.
- வங்கி கடன்களையும், நிறுவன கடன் நிதியையும் பயன்படுத்தி சிறு தொழில் தொடங்கி குடும்ப வருமானத்தை அதிகப்படுத்தியுள்ளார்கள்.
- கழிவறையின் அவசியத்தை உணர்ந்து தங்களுக்கான தனிநபர் கழிப்பிடத்தை உருவாக்கியுள்ளார்கள்.

**உலக கழிவறை தினம்:**

நவம்பர் 10, 2016 அன்று ஆத்தூர் மறைவட்டத்தில் உள்ள கோனேரிப்பட்டி கிரமத்தில் உலக கழிவறை தினமானது அனுசரிக்கப்பட்டது. கழிவறையின் அவசியம் குறித்த விழிப்புணர்வு கை-பதாகைகளை ஏந்தி குழு உறுப்பினர்கள் ஊர்வலமாக வந்தார்கள். இந்நிகழ்ச்சியில் அருட்சகோதரி. கிளமன்ஸ் (குளூனி கன்னியர் இல்லம், கோனேரிப்பட்டி), திரு. அருள்மணி (STLS-அரசு மருத்துவமனை, தம்மம்பட்டி), திருமதி. சுமதி (Staff Nurse-அரசு மருத்துவமனை, தம்மம்பட்டி), திருமதி.முத்தமிழ் செல்வி (ICTC - ஆலோசகர்,அரசு மருத்துவமனை, தம்மம்பட்டி) ஆகியோர் கலந்து கொண்டு உடல் நலம் குறித்த பல்வேறு தலைப்புகளில் சிறப்புரை ஆற்றினார்கள். அதன்பின் நிகழ்ச்சியில் கலந்துக்கொண்ட அனைத்து பெண்களுக்கும் சர்க்கரைநோய், ரத்த அழுத்தம் மற்றும் காசநோய்கான இலவச பரிசோதனைகள் செய்யப்பட்டது. கழிவறையின் அவசியத்தை உணர்ந்து 15 நபர்கள் இத்திட்டத்தில் கடன் உதவி பெற்று தனிநபர் கழிவறை அமைத்துள்ளார்கள். மற்ற பகுதியில் உள்ள 10 நபர்களுக்கு கடன் உதவி வழங்கப்பட்டுள்ளது.

**ஆன்மீக செயல்பாடுகள்:**

- புனித அன்னை தெராசா கோல்பிங் குழு (சேலம்), புனித அந்தோணியார் திருவிழா அன்று புனித ஹென்றி முதியோர் இல்லத்திலுள்ள முதியோர்களுக்கு உணவளித்து அவர்களோடு இணைந்து ஜெபித்தார்கள்.
- கோனேரிப்பட்டி கோல்பிங் குழு மக்கள் அனைவரும் இணைந்து மாதம் ஒருமுறை கோல்பிங் தந்தைக்காகவும், உறுப்பினர்களுக்காகவும் மற்றும் பணியாளர்களுக்காகவும் ஜெபித்தனர்.

- பங்கில் உள்ள பக்த சபைகளுடன் இணைந்து கோல்பிங் உறுப்பினர்கள் மருத்துவமனைகளுக்கு சென்று நோயாளிகளுக்காக ஜெபித்தார்கள் மற்றும் தவகால செயல்பாடுகளில் ஈடுபட்டு உதவி செய்தார்கள்.
- 25.12.2016 அன்று கோல்பிங் தினமானது சேலம் சமூக சேவை சங்கத்தில் அனுசரிக்கப்பட்டது. சேலம் சமூக சேவை சங்கத்தின் இயக்குனர் அருட்பணி. ஆரோக்கியசாமி அவர்கள் மற்றும் சேலம் மறைமாவட்ட முதன்மை குரு அருப்பணி. ஜான் ஜோசப் அவர்களால் திருப்பலி நிறைவேற்றப்பட்டது. இதில் 153 பெண்கள் கலந்துக்கொண்டார்கள்.

## Twinning Project:

**புதிய திட்டம்:**

இத்திட்டம் ஒடுக்கப்பட்டவர்களின் (vulnerable people) வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்கத்தை அடிப்படையாக கொண்டு கோல்பிங் திட்டத்தில் ஆரம்பிக்கப்பட்டது.

**நோக்கம்:**

இத்திட்டத்தில் ஒடுக்கப்பட்டவர்களை இனங்கண்டு அவர்களின் வாழ்வாதாரத்தை சமூகம், பொருளாதாரம் மற்றும் அரசியல் ரீதியாக முன்னேற்றம் காண செய்வது.

**இலக்கு பகுதி:**

- தெடாவூர்
- கொண்டையம்மல்லிரோடு
- நத்தகரை

**இலக்கு மக்கள்:**

- விதவைகள்
- துப்புரவு பணியாளர்கள்
- விவசாய கூலிகள்

**செயல்பாடுகள்:**

இத்திட்டத்தின் மூலம் கிராம அளவிலான கூட்டமைப்பு உருவாக்கப்பட்டது. கிராம முன்னேற்ற குழு (**VDC**) உருவாக்கப்பட்டது. இக்குழுவில் கிராம சுகாதார அலுவலர், ஓய்வு பெற்ற ஆசிரியர், கிராம பஞ்சாயத்து அலுவலர், கோல்பிங் குழு பொறுப்பாளர்கள் மற்றும் கோல்பிங் திட்ட பணியாளர்கள் ஆகியோர் இடம் பெற்றனர். மேலும் குழந்தைகளுக்கான குழுக்கள் திட்ட பகுதிகளில் உருவாக்கப்பட்டுள்ளது.

**பொருளாதார செயல்பாடுகள்:**

குழு மக்கள் பொருளாதாரத்தில் மேம்படுவதற்காக கோல்பிங் திட்டத்தில் கடன் கொடுக்கப்பட்டது.
அதற்கான விவரங்கள் பின்வருமாறு:

**கறவைமாட்டுக் கடன் திட்டம்:**

| வ. எண் | பெயர் | குழுவின் பெயர் | ஊர் | கடன்தொகை |
|---|---|---|---|---|
| 1 | பிரியா | அமல அன்னை கோல்பிங் குழு | சவேரியார்பளையம் | 20000 |
| 2 | ரோசாலி மேரி | அமல அன்னை கோல்பிங் குழு | சவேரியார்பளையம் | 20000 |
| 3 | புஸ்பா | அமல அன்னை கோல்பிங் குழு | சவேரியார்பளையம் | 20000 |
| 4 | ரெஜினா | புனித ஜோசப் கோல்பிங் குழு | ஆர்.சி.செட்டிப்பட்டி | 20000 |
| 5 | சவரியம்மாள் | புனித ஜோசப் கோல்பிங் குழு | ஆர்.சி.செட்டிப்பட்டி | 20000 |
| 6 | அமுதா | சலேத் அன்னை கோல்பிங் குழு | கோனேரிப்பட்டி | 20000 |
| 7 | பிரியங்கா | சலேத் அன்னை கோல்பிங் குழு | கோனேரிப்பட்டி | 10000 |
| 8 | டோக்கியோ | அந்தி மல்லி கோல்பிங் குழு | கோனேரிப்பட்டி | 10000 |
| 9 | ஜெயராக்கிணி | அந்தி மல்லி கோல்பிங் குழு | கோனேரிப்பட்டி | 10000 |
| 10 | வனத்தால் | அந்தி மல்லி கோல்பிங் குழு | கோனேரிப்பட்டி | 10000 |
| 11 | சகாயராணி | வனத்துச்சின்னப்பர் கோல்பிங் குழு | செந்தாரப்பட்டி | 10000 |
| 12 | P.மேரி | அன்னை வேளாங்கண்ணி கோல்பிங் குழு | செந்தாரப்பட்டி | 10000 |
| 13 | அருள் மேரி | லில்லிப்பூ கோல்பிங் குழு | கோனேரிப்பட்டி | 10000 |

**வீடுகட்டும் திட்டம்:**

| வ. எண் | பெயர் | குழுவின் பெயர் | ஊர் | கடன்தொகை | |
|---|---|---|---|---|---|
| | | | | கடன் | மானியம் |
| 1 | பாத்திமா | அந்தோணியார் கோல்பிங் குழு | வாழப்பாடி | 50000 | 10000 |
| 2 | செல்வராணி | லில்லிபூ கோல்பிங் குழு | கோனேரிப்பட்டி | 50000 | 10000 |
| 3 | மெட்டில்டா | அந்திமல்லி கோல்பிங் குழு | கோனேரிப்பட்டி | 50000 | 10000 |
| 4 | ஆரோக்கிய மேரி | அந்தோணியார் கோல்பிங் குழு | மஞ்சக்குட்டை | 50000 | 10000 |

**தனிநபர் கழிவறை திட்டம்:**

| வ. எண் | பெயர் | குழுவின் பெயர் | ஊர் | கடன்தொகை | |
|---|---|---|---|---|---|
| | | | | கடன் | மானியம் |
| 1 | ஜோசப் மேரி | லையோலா கோல்பிங் குழு | அக்ரஹாரம் | 15000 | 5000 |
| 2 | பிலேமினா | புனித வளனார் கோல்பிங் குழு | அக்ரஹாரம் | 15000 | 5000 |
| 3 | லூர்து மேரி | புனித வளனார் கோல்பிங் குழு | அக்ரஹாரம் | 15000 | 5000 |
| 4 | ஆரோக்கிய மேரி | அந்தோணியார் கோல்பிங் குழு | மஞ்சக்குட்டை | 15000 | 5000 |
| 5 | பிரான்சிஸ் மதலைமேரி | அந்தோணியார் கோல்பிங் குழு | மஞ்சக்குட்டை | 15000 | 5000 |
| 6 | ஜெயராக்கிணி | ஆரோக்கிய மாதா கோல்பிங் குழு | மஞ்சக்குட்டை | 15000 | 5000 |
| 7 | செல்வராணி | லில்லிபூ கோல்பிங் குழு | கோனேரிப்பட்டி | 15000 | 5000 |
| 8 | மெடில்டா | அந்திமல்லி கோல்பிங் குழு | கோனேரிப்பட்டி | 15000 | 5000 |
| 9 | இளவரசி | குங்குமம் கோல்பிங் குழு | கோனேரிப்பட்டி | 15000 | 5000 |
| 10 | பாத்திமா | அந்தோணியார் கோல்பிங் குழு | வாழப்பாடி | 15000 | 5000 |
| 11 | ரோஸ்மேரி | சலேத் அன்னை கோல்பிங் குழு | கோனேரிப்பட்டி | 15000 | 5000 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 12 | அனிதா செலின் | குங்குமம் கோல்பிங் குழு | கோனேரிப்பட்டி | 15000 | 5000 |
| 13 | சந்தன மேரி | குங்குமம் கோல்பிங் குழு | கோனேரிப்பட்டி | 15000 | 5000 |
| 14 | எல்பிரித்தால் | அந்திமல்லி கோல்பிங் குழு | கோனேரிப்பட்டி | 15000 | 5000 |
| 15 | வெண்ணிலா | முல்லை கோல்பிங் குழு | காந்திநகர் | 15000 | 5000 |
| 16 | ரோசலின் மேரி | முல்லை கோல்பிங் குழு | காந்திநகர் | 15000 | 5000 |
| 17 | மீனா | வனத்துச்சின்னப்பர் கோல்பிங் குழு | சிலுவகிரி | 15000 | 5000 |
| 18 | ஜோஸ்பின் | வனத்துச்சின்னப்பர் கோல்பிங் குழு | சிலுவகிரி | 15000 | 5000 |
| 19 | சரண்யா | வனத்துச்சின்னப்பர் கோல்பிங் குழு | சிலுவகிரி | 15000 | 5000 |
| 20 | கலா | அன்னை தெரசா கோல்பிங் குழு | மாரமங்கலம் | 15000 | 5000 |
| 21 | மரியா | அன்னை தெரசா கோல்பிங் குழு | மாரமங்கலம் | 15000 | 5000 |
| 22 | மதலையம்மாள் | அன்னை தெரசா கோல்பிங் குழு | மாரமங்கலம் | 15000 | 5000 |
| 23 | மரியமதலேனால் | புனித ஜோசப் கோல்பிங் குழு | ஆர்.சி.செட்டிப்பட்டி | 15000 | 5000 |
| 24 | சூசன் | புனித ஜோசப் கோல்பிங் குழு | ஆர்.சி.செட்டிப்பட்டி | 15000 | 5000 |
| 25 | ஞனசௌந்திரி | அமல அன்னை கோல்பிங் குழு | ஆர்.சி.செட்டிப்பட்டி | 15000 | 5000 |
| 26 | டெய்சிவிமலா மேரி | அமல அன்னை கோல்பிங் குழு | ஆர்.சி.செட்டிப்பட்டி | 15000 | 5000 |
| 27 | செலஸ்டினாமேரி | புனித ஜோசப் கோல்பிங் குழு | ஆர்.சி.செட்டிப்பட்டி | 15000 | 5000 |
| 28 | ரீட்டாமேரி | அமல அன்னை கோல்பிங் குழு | ஆர்.சி.செட்டிப்பட்டி | 15000 | 5000 |
| 29 | சிறிய புஸ்பம் | புனித ஜோசப் கோல்பிங் குழு | ஆர்.சி.செட்டிப்பட்டி | 15000 | 5000 |
| 30 | அமலா மேரி | புனித ஜோசப் கோல்பிங் குழு | ஆர்.சி.செட்டிப்பட்டி | 15000 | 5000 |

**தொழிற்கல்வி உதவி திட்டம்:**

| வ. எண் | பெயர் | குழுவின் பெயர் | ஊர் | கடன்தொகை |
|---|---|---|---|---|
| 1 | ஜோசப் கசில்டா | புனித வளனார் கோல்பிங் குழு | அக்ரஹாரம் | 20000 |
| 2 | சுதா | சலேத் அன்னை கோல்பிங் குழு | கோனேரிப்பட்டி | 20000 |
| 3 | மெர்சி | அந்திமல்லி கோல்பிங் குழு | கோனேரிப்பட்டி | 10000 |
| 4 | செல்லம்மாள் | லில்லிபூ கோல்பிங் குழு | கோனேரிப்பட்டி | 10000 |
| 5 | செல்வி | அன்னை வேளாங்கண்ணி கோல்பிங் குழு | செந்தாரப்பட்டி | 10000 |
| 6 | சுமதி | சலேத் அன்னை கோல்பிங் குழு | கோனேரிப்பட்டி | 10000 |

**சிறுதொழில் திட்டம்:**

| வ. எண் | பெயர் | குழுவின் பெயர் | ஊர் | கடன்தொகை |
|---|---|---|---|---|
| 1 | ஜெயராக்கிணி | ஆரோக்கிய மாதா கோல்பிங் குழு | மஞ்சக்குட்டை | 100000 |
| 2 | ஆரோக்கிய மேரி | அந்தோணியார் கோல்பி குழு | மஞ்சக்குட்டை | 50000 |
| 3 | கவிதா மேரி | மலை மழை மாதா கோல்பிங் குழு | மஞ்சக்குட்டை | 50000 |
| 4 | ஏசுமணி | பாத்திமா கோல்பிங் குழு | மஞ்சக்குட்டை | 50000 |
| 5 | வேணி | அந்தோணியார் கோல்பிங் குழு | வாழப்பாடி | 50000 |
| 6 | சிவமாலை | அந்தோணியார் கோல்பிங் குழு | வாழப்பாடி | 50000 |
| 7 | ஆரோக்கிய ராஜ் | அன்னை தொரசா கோல்பிங் குழு | சேலம் | 100000 |
| 8 | காயத்ரி | அன்னை தொரசா கோல்பிங் குழு | சேலம் | 50000 |
| 9 | அருள் மேரி | ஆரோக்கிய மாதா கோல்பிங் குழு | மஞ்சக்குட்டை | 50000 |

| | | | | |
|---|---|---|---|---|
| 10 | மல்லிகா | அந்தோணியார் கோல்பிங் குழு | மஞ்சக்குட்டை | 50000 |
| 11 | கவிதா | மலை மழை மாதா கோல்பிங் குழு | மஞ்சக்குட்டை | 50000 |
| 12 | சித்ரா | அந்தோணியார் கோல்பிங் குழு | வாழப்பாடி | 50000 |
| 13 | ரெஜினா மேரி | லூர்து மாதா கோல்பிங் குழு | அக்ரஹாரம் | 50000 |

**கோல்பிங் திட்டத்தில் பயனடைந்தவர்களின் எண்ணிக்கை:**

கறவைமாடு திட்டத்தில் 13 நபர்கள், கழிவறை திட்டத்தில் 30 நபர்கள், வீடு கட்டும் திட்டத்தில் 4 நபர்கள், தொழிற் கல்வி திட்டத்தில் 6 நபர்கள் மற்றும் சிறுதொழில் திட்டத்தில் 13 நபர்கள் என மொத்தம் 66 உறுப்பினர்கள் கோல்பிங் திட்டத்தில் பயனடைந்திருக்கிறார்கள்.

**சிறப்பு தினம் அனுசரிப்பு:**

உலக கழிவறை தினம், கோல்பிங் தினம், உலக பெண்கள் தினம், பிளாஸ்டிக் பயன்பாட்டை தவிர்த்தல் தினம், தீயனைப்பு பேரிடர் மேலாண்மை தினம் மற்றும் உலக காசநோய் தினம் ஆகிய தினங்கள் அனுசரிக்கப்பட்டது.

**எதிர்கால திட்டங்கள்:**

நிலைத்த தன்மையுடன் கூடிய தொழில்களை இலக்கு மக்களுக்கு இனம்கான செய்து (கூட்டு தொழில்) தன்னிறைவடையச் செய்வது.



## உ.௩. டெஃபி பெல்ஜிக்யூ ஆஃப்ரிக்கா

## Defi Belgique Afrique (DBA)

**திட்டத்தின் பெயர்:**

ESAI (Education and Sustainable Agriculture Practices in India) – என்பது இந்திய மற்றும் பெல்ஜிய மாணவர்களுக்கான கலாச்சார பரிமாற்றம் மற்றும் இயற்கை விவசாயத்தை ஊக்குவிக்கும் திட்டமாகும். கடந்த 2016 – 2017 ஆம் ஆண்டில் பெல்ஜிய நாட்டை சேர்ந்த 34 மாணவ மாணவிகளும் 8 ஆசிரியர்களும், செயின்ட் ஜான் பிரிட்டோ பள்ளியை சேர்ந்த 34 மாணவ மாணவிகளும் மற்றும் சேலம் சமூக சேவை சங்க நிறுவன பணியாளர்களும் கலந்து கொண்டனர்.

**திட்டத்தின் குறிக்கோள்:**

- பயிற்சிகள் மூலம் மாணவர்களுக்கிடையே இயற்கை மற்றும் சமூக விழிப்புணர்வை ஏற்படுத்துதல்.
- இந்திய மற்றும் பெல்ஜிய மாணவர்களுக்கிடையே கலாச்சாரம் மற்றும் நட்புணர்வை ஏற்படுத்துதல்.
- இயற்கை வேளாண்மை பயிற்சி மூலமாக விவசாய சுயசார்பு அடைவதற்கு இட்டுச்செல்லுதல்.

**திட்டபகுதிகள்:**

- சேலம்.
- அயோத்தியாபட்டினம்.
- நீர்முள்ளி குட்டை.
- உடையார்பாளையம்.
- செயின்ட் ஜோசப் ஆஸ்பிட்டல், ஓமலூர்.
- செயின்ட் ஜான்ஸ் CBSE பள்ளி, சேலம்.
- செயின்ட் ஜான் பிரிட்டோ பள்ளி, ஓமலூர்.

**பயிற்சிகள்:**

இந்திய மாணவ மாணவியர்களுக்கு கொடுக்கப்பட்ட பயிற்சிகள்.

- புவி வெப்பமயமாதல் மற்றும் பருவநிலை மாற்றம்.
- சுகாதாரம் மற்றும் தூய்மை சார்ந்த பயிற்சி.
- HIV / AIDS மற்றும் காசநோய் பற்றிய விழிப்புணர்வு பயிற்சி.
- குடி மற்றும் குடியால் ஏற்படும் பிரச்சனைகள்.
- குழந்தை தொழிலாளர்கள் மற்றும் அவர்களுக்கு ஏற்படும் பாதிப்புகள்.
- பெண்களும் அவர்களது உரிமைகளும்.
- பாலின சமத்துவம்.
- இடம் பெயர்தல் மற்றும் அதன் விளைவுகள்.
- ஊடகம் மற்றும் இளையவர்கள் மீதான ஊடகத்தின் தாக்கம்.
- Child Help Line (1098).
- கலாச்சார பரிமாற்றத்திற்கான தயாரிப்பு பயிற்சி.

**செயல்பாடுகள்:**

1. **திட்ட மேலாண்மை குழு:**

   இயக்குனர், திட்ட ஒருங்கிணைப்பாளர்கள், பயிற்றுனர், தன்னார்வாலர்கள் கொண்டு திட்ட மேலாண்மை குழுவானது மார்ச் - 2013ல் ஆரம்பிக்கப்பட்டது.

2. **மரம் நடுதல்:**

   மரம் நடுதல் மூலம் இயற்கையை பேணிக்காப்பது என்பது இத்திட்டத்தின் ஒரு முக்கிய செயல்பாடாகும். அதன் அடிப்படையில் சேலம் மாவட்டத்தில் அயோத்தியாபட்டினம் பகுதியில் உள்ள நீர்முள்ளி குட்டை என்னும் கிராமத்தில் மா, கொய்யா, சப்போட்டா, மாதுளை மற்றும் எலுமிச்சை போன்ற 350 மரகன்றுகள் நடப்பட்டன.

**கலாச்சார பரிமாற்ற நிகழ்ச்சி:**

- கலாச்சார பரிமாற்ற நிகழ்ச்சியானது சேலம் சமூக சேவை சங்கத்தால் ஜீலை மாதம் நடத்தப்பட்டது.
- இதில் பெல்ஜியம் மாணவ மாணவிகள் நம் நாட்டின் வரலாறு, அரசியல், கலாச்சாரம், ஆண் பெண் சமத்துவம், கல்வி முறைகள், சுய தொழில் செய்யும் பெண்கள் மற்றும் சுய உதவி குழுவின் செயல்பாடுகள் பற்றி அறிந்து கொண்டார்கள்.

- இந்திய மாணவ மாணவிகள் பெல்ஜிய நாட்டின் கல்வி முறை பற்றியும் ஆண் பெண் இன வேறுபாட்டின்மை பற்றியும் அறிந்துகொண்டனர்.
- இந்திய பெல்ஜிய மாணவ, மாணவிகள் இணைந்து தம்மம்பட்டி, உடையர்பாளையம் ஆகிய பகுதிகளில் உள்ள சுய உதவி குழுக்கள் செய்யும் தொழில்களை பார்த்து தெரிந்து கெண்டனர்.
- இதில் கல்சிற்பம் செய்தல், மரசிற்பம் செய்தல், கீற்றுபின்னுதல் போன்ற தொழில்களை கண்டு அத்தொழிலை அவர்களுடன் இணைந்து செய்து பார்த்தனர்.
- பெல்ஜியம் மாணவ மாணவிகள் இந்திய வரலாறு, அரசியல், கல்வி சம்மந்தமான சிறப்பு வகுப்புகளில் பங்கேற்றார்கள்.
- பெல்ஜிய மாணவ மாணவிகள் திருநங்கையர்களுடன் கலந்துரையாடி அவர்களது வாழ்க்கை அனுபவங்கள் மற்றும் அவர்கள் வாழ்வில் சந்தித்த சவால்கள் பற்றி கேட்டு தெரிந்து கொண்டார்கள்.
- யோகா கலையை பற்றி கற்றுக்கொண்டனர்.

**எதிர்காலத் திட்டம்:**

வரும் ஆண்டில் சேலம் சமூக சேவை சங்கத்தில் ஒருங்கிணைந்த பண்ணையம் அமைக்கப்பட உள்ளது. சுய உதவி குழு பெண்களுக்கு வீட்டுதோட்டம், மாடித்தோட்டம், தேனீ வளர்ப்பு, மீன் வளர்ப்பு, ஆடு வளர்ப்பு, மண்புழு உரம் தயாரித்தல் மற்றும் இயற்கை விவசாயம் போன்ற பயிற்சிகள் கொடுக்கப்பட உள்ளது.



## 2.4. சாய் - அக்சயா திட்டம்

## CHAI - Axshya

**இலக்கு:**

சமூக பங்களிப்பின் மூலம் காசநோய்க்கான சேவையை மேம்படுத்துதல் மற்றும் காசநோயைக் கட்டுப்படுத்துதல்.

**நோக்கம்:**

- சமுதாய மக்களின் பங்களிப்பின் மூலம் திருத்தியமைக்கப்பட்ட தேசிய காசநோய் தடுப்பு திட்டத்தின் நோக்கம் மற்றும் செயல்பாடுகளை மேம்படசெய்தல்.
- சமூக பங்களிப்பின் மூலம் ஒதுக்கப்பட்ட மக்களுக்கு காசநோய் தடுப்பு மற்றும் பராமரிப்பு பற்றிய விழிப்புணர்வை மேம்படுத்துதல்.

**செயல்பாடுகள்:**

சாய் - அக்சயா திட்டத்தில் சேலம் சமூக சேவை சங்கம் கடந்த 2010 ஆம் ஆண்டு முதல் பங்களித்து வருகின்றது. மேட்டூர், மேச்சேரி, வீரபாண்டி, ஏற்காடு, நங்கவள்ளி மற்றும் கொங்கனாபுரம் ஆகிய வட்டங்களில் இத்திட்டம் செயல்பட்டு வருகிறது. சேலம் சமூக சேவை சங்க பணியாளர்கள் இலக்கு பகுதிகளில் உள்ள கிராமங்களுக்கு சென்று மாதம்தோறும் காசநோய் விழிப்புணர்வு கூட்டம் நடத்தியும், வீடு வீடாக சென்று கிராம மக்களுக்கு காசநோய் பற்றிய அறிகுறிகள், பரிசோதிக்கும் முறைகள் மற்றும் சிகிச்சை முறைகள் பற்றியும் மக்களுக்கு எடுத்து கூறுகின்றனர். காசநோய் அறிகுறிகளோடு உள்ள நபர்களைக் கண்டால் அவர்களுக்கு ஆலோசனைகள் கூறி அவர்களை இலவச சளி பரிசோதனை செய்து கொள்ள அருகில் உள்ள அரசு மருத்துவமனை அல்லது அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு பரிந்துரை செய்கிறார்கள். மருத்துவமனைக்கு வர இயலாதவர்களுக்கு அவர்களின் வீட்டிலேயே சளி மாதிரிகளைச் சேகரித்து அதனை பரிசோதனை மையத்திற்கு கொண்டு சேர்க்கின்றனர்.

சேலம் மாவட்டத்தில் 8 அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களில், தினமும் நமது பணியாளர்கள், அங்கு வரும் மக்களில் காசநோய் அறிகுறி உள்ள நபர்களுக்கு ஆலோசனைகள் வழங்கி அவர்களிடம் சளி மாதிரிகளைச் சேகரித்து அதை அருகில் உள்ள சளி பரிசோதனை மையத்திற்கு கொண்டு சேர்க்கின்றனர். கடந்த ஆண்டில் 43 காசநோய் விழிப்புணர்வு கூட்டங்கள் நடத்தப்பட்டுள்ளன. இதில் 1927 பேர் கலந்துக் கொண்டு பயன்பெற்றனர். மேலும் வீரபாண்டி, மேச்சேரி, ஏற்காடு, நங்கவள்ளி மற்றும் கொங்கனாபுரம் வட்டத்தில் உள்ள கிராமங்களில் சுமார் 11,353 வீடுகளுக்கு காசநோய் பற்றிய விழிப்புணர்வு அளிக்கப்பட்டுள்ளது. ஆரம்ப சுகாதார நிலையங்களில் 2,110 நபர்களுக்கு இலவச சளி பரிசோதனைச் செய்ய உதவியுள்ளார்கள்.

நமது பணியாளர்கள் மூலம் கடந்த ஆண்டில் 65 காசநோயாளிகள் கண்டுபிடிக்கப்பட்டனர். அவர்கள் அனைவருக்கும் காசநோய்கான ஆறுமாத இலவச **“டாட்ஸ”** சிகிச்சை தொடங்கப்பட்டது. கடந்த ஆண்டில் நமது பணியாளர்கள் 145 காசநோயாளிகளுக்கு டாட்ஸ் சிகிச்சை அளித்து குணப்படுத்தி உள்ளார்கள்.



## 2.5. மானோஸ் யூனிடாஸ்

## MANOS UNIDAS

**நோக்கம்:**

நூல் தொழிற்சாலையில் பணிபுரிந்த முன்னாள் பணியாளர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துதல் மற்றும் வியாபார யுக்திகள் மூலம் வணிகத்தை மேம்படுத்துதல்.

**திட்டப் பகுதிகள்:**

1. அயோத்தியாப்பட்டினம்.
2. ஓமலூர்.
3. கொங்கனாபுரம்.
4. மகுடன்சாவடி.
5. பனமரத்துப்பட்டி.

**இத்திட்டத்தின் முக்கிய பயிற்சிகள்:**

இத்திட்டத்தில் ஆர்வமுள்ள மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட நூல் ஆலையில் பணிபுரிந்த பணியாளர்களுக்கு தங்களின் வாழ்க்கை தரத்தை மேம்படுத்துவதற்காக கொடுக்கப்பட்ட பயிற்சிகளின் விவரம் பின்வருமாறு:

- ❖ பெண்களுக்கான தொழில் முனைவோர் பயிற்சி.
- ❖ வளஆதாரங்களை அறிந்து அதற்குகேற்றார்போல் முறையாக பயன்படுத்துதல் பயிற்சி.
- ❖ வியாபார யுக்திகளை மேம்படுத்துவதற்கான பயிற்சி.
- ❖ பெண்களுக்கான வணிக யுக்திகளை மேம்படுத்துதல் பயிற்சி.
- ❖ கிராமப்புற பெண்களுக்கு கிடைக்கும் நலதிட்டங்கள் (பயன்பாடுகள்) பற்றிய பயிற்சி.

**வாழ்வாதாரத்தை மேம்படுத்த கொடுக்கப்பட்ட பயிற்சிகள்:**

நூல் ஆலையில் பணிபுரிந்த முன்னாள் பணியாளர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த கைதொழில் பயிற்சிகள் கொடுக்கப்பட்டது. அவை

- தையல் பயிற்சி.
- எம்ராய்டிங் பயிற்சி.
- மாலை பின்னல் பயிற்சி.
- வளையல் செய்யும் பயிற்சி.
- காதணி செய்யும் பயிற்சி.
- கூடைபின்னல் பயிற்சி.

இதன் மூலம் மக்கள் தங்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தி கொள்கிறார்கள்.

**தாக்கம்:**

- தையல் பயிற்சியின் மூலம் முன்னாள் நூல்மில் பணியாளர்கள் குழுவாக இணைந்து தையல் பயிற்சி நிலையம் அமைத்து மற்ற உறுப்பினர்களுக்கு பயிற்சி கொடுக்கிறார்கள்.
- வளையல் செய்யும் பயிற்சி மூலம் மக்கள் வளையல் செய்து வியாபாரம் செய்கின்றனர்.
- கூடை பின்னல் பயிற்சி மூலம் பணியாளர்கள் கூடைகள் செய்து சந்தைபடுத்தி வருகிறார்கள்.
- இப்பயிற்சிகள் வாயிலாக இந்த ஆண்டு 746 பணியாளர்கள் பயன்பெற்றார்கள்.



## 2.6. ஆயர் கூட்டமைப்பு - இத்தாலியானா

## BCI – Bishop Confrance of Italiana

**திட்டத்தின் பெயர்:**

கிராமப்புற இளைஞர்களை ஊக்குவித்து இயற்கை வேளாண்மையில் சுயமுன்னேற்றம் மற்றும் தன்னிறைவு அடையச் செய்தல்.

**திட்டத்தின் கொள்கை:**

கிராமத்திலுள்ள குறுநில மற்றும் ஒடுக்கப்பட்ட விவசாய இளைஞர்களை அங்குள்ள வளஆதாரங்களை முறையாக பயன்படுத்த செய்து விவசாயத்தில் நீடித்த நிலைப்பு தன்மையை அடைய செய்வது.

**திட்டத்தின் நோக்கம்:**

- சேலம் மாவட்ட கிராமபுற குறுநில ஒடுக்கப்பட்ட விவசாய இளைஞர்களை பயிற்சிகளின் மூலம் அவர்களது விவசாய தொழில்நுட்பத் திறனை மேம்படுத்தி இயற்கை விவசாய முறையில் தன்னிறைவினை அடைய செய்வது.
- குறுநில மற்றும் ஒடுக்கப்பட்ட விவசாய இளைஞர்களிடையே நீடித்த நிலைப்பு தன்மையுடைய மரபுசார் இயற்கை விவசாய முறையை உயர்த்த பங்களிப்பு சார் அணுகு முறையை உருவாக்குவது.

**கொடுக்கப்பட்ட பயிற்சிகள்:**

- இயற்கை உரம் தயாரித்தல் பயிற்சி.
- இயற்கை வேளாண்மை குறித்த பயிற்சி.
- மண்புழு உரம் தயாரிப்பதற்கான பயிற்சி.
- தேனீ வளர்ப்பு பயிற்சி.
- மீன் வளர்ப்பு பயிற்சி.
- பஞ்சகவ்யா தயாரித்தல் பயிற்சி.
- மூலிகை மரங்கள் மற்றும் செடிகள் வளர்ப்பு பயிற்சி.

ஆகிய பயிற்சிகள் இலக்கு பகுதி இளைஞர்களுக்குக் கொடுக்கப்பட்டன.

**செயல்பாடுகள்:**

- சேலம் மாவட்டத்தில் தம்மம்பட்டி, ஆத்தூர், ஓமலூர், கெங்கவள்ளி மற்றும் தலைவாசல் ஆகிய இடங்களில் உள்ள இளைஞர்களுக்கு நமது பாரம்பரிய விவசாய தொழில்நுட்ப முறை பற்றியும், உள்நாட்டு நடவு பயிர்களின் பயன்பாடு குறைந்து வருவது பற்றியும், உள்ளூர்வளங்கள் அழிந்து வருவது பற்றியும் மற்றும் இயற்கை விவசாய முறைகளை நாம் எப்படி பேணிகாப்பது போன்ற பயிற்சிகள் கொடுக்கப்பட்டன.

**தாக்கம்:**

- இயற்கை உரமான பஞ்சகாவ்யா தயாரிப்பதற்கான முறைகள் மற்றும் அதன் பயன்களை பற்றி அறிந்து அதனை உடனடியாக செயல்படுத்த போவதாகவும் கூறினர்.
- மண்புழு உரம் தயாரித்தலுக்கான பயிற்சியின் மூலம் இளைஞர்கள் இயற்கை உரம் தயாரித்தல் மற்றும் அவற்றை பயன்படுத்தும் முறைகள் பற்றி தெரிந்துக்கொண்டு அதன் முறையே இயற்கை விவசாயம் செய்து வருகிறார்கள்.
- பூச்சிக்கொல்லியின் தீயவிளைவுகளை உணர்ந்து கொண்டார்கள். தற்பொழுது இயற்கை கழிவுகள் மற்றும் மண்புழு உரங்களை நிலத்திற்கு பயன்படுத்துகிறார்கள்.

## 2.7. காரிதாஸ் அந்தோணியானா

## CARITAS ANTONIANA

**திட்டத்தின் பெயர்:**

மக்கள் வளப் பயிற்சி மையத்தில் படுக்கை வசதியுடன் கூடிய தங்கும்அறை அமைத்தல்.

**பிரச்சனைகள் மற்றும் திட்டத்தின் நோக்கம்:**

சேலம் சமூக சேவை சங்கத்தில் பல்வேறு விதமான பயிற்சிகள் (சமூக, பொருளாதார மற்றும் ஆன்மீகம்) நடைபெற்று வருகிறது. வெகு தொலைவில் இருந்து வரும் பங்கேற்பாளர்கள் பயிற்சி அரங்கிலே தங்கி பயிற்சி பெறுகின்ற சூழ்நிலை உருவாகின்றது. இதனால் இவர்களுக்கு படுக்கை வசதியுடன் கூடிய தங்கும்அறை அமைத்து தர வேண்டும் என காரிதாஸ் அந்தோணியானாவிடம் கேட்டுக்கொள்ளப்பட்டது.

**திட்டத்தின் நோக்கம்:**

மக்கள் வள பயிற்சி மையத்தில் பயிற்சி பெற வரும் பங்கேற்பாளர்களுக்கு நல்ல சூழ்நிலையை உறுதி செய்யும் வகையில் படுக்கை வசதியுடன் கூடிய தங்கும்அறை அமைத்தல்.

**செயல்பாடுகள்:**

மேற்கூறப்பட்ட காரணத்திற்காக சேலம் சமூக சேவை சங்கம் காரிதாஸ் அந்தோணியானா நிறுவனத்துடன் இணைந்து படுக்கை வசதியுடன் கூடிய தங்கும்அறை அமைப்பதற்கான செயல்பாடுகளை மேற்கொண்டது.

**திட்டத்தின் பயன்கள்:**

- சிறந்த முறையில் மக்கள் வளப் பயிற்சி நிலையத்தின் மேல் தலத்தில் 100 படுக்கைகளுடன் கூடிய தங்கும்அறை அமைக்கப்பட்டது.
- பங்கேற்பாளர்களுக்கும் பயிற்சியில் ஈடுபடுவதற்கு இணக்கமான சூழ்நிலை உருவாக்கப்பட்டது.
- தற்போது பயிற்சியானது எந்தவித பிரச்சனைகளும் இன்றி சுமூகமாக நடைபெறுகிறது.

## ௨.௧. காரிதாஸ் இந்தியா

## CARITAS INDIA - உதயம் ECO DRR

**திட்டத்தின் முக்கிய நோக்கம்:**

சேலம் மாவட்டத்தில் மழை வெள்ளத்தால் மிகவும் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு வாழ்வாதார பயிற்சிகள் மற்றும் உதவிகள் மூலம் அவர்களின் இயல்பு வாழ்கைக்கு திரும்ப உதவுதல். குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை அனைத்து தரப்பு மக்களுக்கும் சென்றடையும் திட்டமாகும்.

**செயல்பாடுகள்:**

இந்த திட்டம் சேலம் மாவட்டத்திலுள்ள 12 கிராமங்களை தேர்ந்தெடுத்து செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின் ஒரு பகுதியாக மக்களுக்கு தொழில் முனைவோர் பயிற்சியும், பெண்களுக்கு தையல் பயிற்சியும், தீயணைப்பு மற்றும் தீதடுப்பு பயிற்சியும், ஆண்களுக்கு ஓட்டுநர் பயிற்சியும் அளிக்கப்பட்டுள்ளது. மேலும் பள்ளிக் குழந்தைகளுக்கு உடல் நலம் குறித்த பயற்சியும், வீட்டுத்தோட்டம் அமைத்தல் பயிற்சியும், கிராமப்புற இளைஞர்கள் மற்றும் விவசாயிகளுக்கு நீர் மற்றும் மண்வள பாதுகாப்புக்கான பயிற்சியும், 10 மற்றும் 12 ஆம் வகுப்பு மாணவர்களுக்கு மேல்படிப்பிற்கு வழிகாட்டும் பயிற்சியும், பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு உடல் நலம் குறித்த பயிற்சியும் அளிக்கப்பட்டுள்ளது. மேலும் வீடுகளை இழந்தவர்களுக்கு வீடுகளை சீரமைத்து தருவதும் முக்கிய செயல்பாடாகும்.

**சிறப்பு செயல்பாடுகள்:**

பிளாஸ்டிக் ஒழிப்பு மற்றும் கருவேல மரங்களை அகற்ற வலியுறுத்தி கோனேரிப்பட்டி கிராமத்தில் சுய உதவிக் குழு மக்கள் மற்றும் பள்ளி மாணவர்களுடன் பேரணி நடத்தப்பட்டது. கெங்கவல்லி மற்றும் ஆத்தூர் பகுதிகளில் தீயணைப்பு மற்றும் தீத்தடுப்பிற்கான பயிற்சி தீயணைப்பு துறையினரின் உதவியுடன் நடைப்பெற்றது.

## உ.௯. காரிதாஸ் இத்தாலியானா
## CARITAS ITALIANA

**திட்டத்தின் பெயர்:**

காசநோயால் பாதிக்கப்பட்ட மக்களின் உடல்நலம் மேம்படுத்துதல்.

**பிரச்சனைகள் :**

காசநோயால் பாதிக்கப்பட்ட மக்கள் 6 மாத கால தொடர் "**டாட்ஸ்**" சிகிச்சையை எடுத்துக்கொள்ள வேண்டும். இடையில் சிகிச்சையை நிறுத்தினாலோ அல்லது தொடர்ச்சியற்ற சிகிச்சை எடுத்தாலோ அவர்கள் முற்றிய நிலை காசநோய் பாதிப்பிற்கு உள்ளாவார்கள். இவர்கள் இரண்டு வருட தொடர்சிகிச்சை எடுக்க வேண்டிய நிலை உள்ளது. காசநோய்க்கு சிகிச்சை எடுக்கும் போது அவர்கள் ஊட்டசத்து மிகுந்த உணவு உட்கொள்வது அவசியமாகும்.

**செயல்பாடுகள்:**

சிகிச்சை எடுத்துக் கொள்ளும் காசநோயாளிகளுக்கு கீழ்காணும் ஊட்டசத்து பொருட்களை வழங்குதல்.

1. பேரிச்சை – ½ கிலோ
2. அவுல் - 1 கிலோ
3. மூக்கு கடலை – ½ கிலோ
4. பச்சைபயிறு – ½ கிலோ
5. பட்டாணி – ½ கிலோ
6. பீன்ஸ் – ½ கிலோ
7. தட்டைபயிறு – ½ கிலோ
8. கொள்ளு – ½ கிலோ

- காசநோயாளிகளுக்கு தொடர் சிகிச்சைக்கு ஆலோசனை அளித்தல்.
- குடும்ப உறுப்பினர்களுக்கு ஆலோசனை அளித்தல்.
- ஏழ்மையான காசநோயாளிகளின் குழந்தைகளுக்கு கல்வி உதவி செய்தல்.

**திட்டத்தின் பயன்கள்:**

- ❖ இத்திட்டத்தின் மூலமாக 160 காசநோயாளிகளுக்கு ஊட்டச்சத்து பொருட்கள் வழங்கப்பட்டு உள்ளது.
- ❖ காசநோயாளிகளுக்கு ஆலோசனை மற்றும் சமூக சேவை சங்க கள பணியாளர்களின் தொடர் கண்காணிப்பின் பயனாக சிகிச்சை இடைநிறுத்தம் வெகுவாக குறைந்துள்ளது.
- ❖ காசநோயாளிகள் குடும்ப உறுப்பினர்களின் ஒத்துழைப்புடன் சிகிச்சையை வெற்றிகரமாக எடுத்துக்கொள்கின்றனர்.

## ௩. சிறப்பு தினக் கொண்டாட்டங்கள்

### *௩.1. கோல்பிங் தினக்கொண்டாட்டம் மற்றும் கிறிஸ்துமஸ் தினக்கொண்டாட்டம்:*

08.12.2016 அன்று கோல்பிங் தினமானது சேலம் சமூக சேவை சங்கத்தில் கோலாகலமாக கொண்டாடப்பட்டது. இந்நிகழ்ச்சியின் துவக்கமாக அனைத்து மக்களும் ஜெபமாலை ஜெபித்துக்கொண்டு சேலம் சமூக சேவை சங்க வளாகத்தை சுற்றி ஊர்வலமாக வந்தனர். இவ்வூர்வலத்தை அருட்தந்தை. ஆரோக்கிய சாமி, அவர்கள் துவங்கி வைத்தார். அதனை தொடர்ந்து சேலம் மறைமாவட்ட முதன்மை குரு அருட்தந்தை. ஜான் ஜோசப் அவர்கள் சிறப்பு திருப்பலியை நிறைவேற்றினார். திருப்பலிக்கு பின்னர் சேலம் மறைமாவட்ட ஆயர் மேதகு.செ.சிங்கராயன் அவர்கள் தலைமையில் கிறிஸ்துமஸ் திருவிழா கொண்டாடப்பட்டது. ஆயர் அவர்கள் கிறிஸ்து பிறப்பு மற்றும் அவரின் வருகை குறித்து சிறப்புரையாற்றினார். அதனை தொடர்ந்து ஏழை பணக்காரர் என்ற ஏற்றத்தாழ்வு இல்லாத சமுதாயம் அமைய வேண்டும் என்பதனை வலியுறுத்தி **“நமது கிறிஸ்துமஸ்”** என்ற குறு நாடகத்தை சுய உதவிக் குழு மக்கள் நடித்து காட்டினார்கள். பின்னர் மேதகு ஆயர். செ. சிங்கராயன் அவர்கள் கோல்பிங் குழு உறுப்பினர்களுக்கு வீடு, கழிவறை மற்றும் தொழிற்கல்வி கடன்களுக்கான காசோலையை வழங்கினார். இவ்விழாவில் பணியாளர்கள், களப்பணியாளர்கள் மற்றும் கோல்பிங் குழு உறுப்பினர்கள் சுமார் 146 பேர் கலந்து கொண்டனர். பங்கேற்பாளர்கள் அனைவருக்கும் மதிய உணவு வழங்கப்பட்டது.

### *௩.2. பொங்கல் தினக்கொண்டாட்டம்:*

13.01.2017 அன்று பொங்கல் தினமானது சேலம் சமூக சேவை சங்கத்தின் இயக்குனர் அருட்தந்தை. ஆரோக்கிய சாமி, அவரின் தலைமையில் கொண்டாடப்பட்டது. இவ்விழாவிற்கு சேலம் அரிசிப்பாளையம் புனித சவேரியார் இளங்குரு மட உதவி அதிபர் அருட்தந்தை.ஆல்பட் அவர்கள் சிறப்பு விருந்தினராக அழைக்கப்பட்டார். மக்கள் அமைப்பு பொறுப்பாளர்கள் அனைவரும் இணைந்து பொங்கல் வைத்தார்கள். அலுவலக பணியாளர்கள், களப்பணியாளர்கள் மற்றும் மக்கள் அமைப்பு பொறுப்பாளர்களுக்கு இளங்குருமட மாணவர்கள் நம் நாட்டு பாரம்பரிய விளையாட்டு போட்டிகளை நடத்தினர். மேலும் போட்டியில் கலந்து கொண்ட அனைவருக்கும் இயக்குநர் தந்தை அவர்கள் பரிசு பொருட்களை வழங்கினார். பங்கேற்பாளர்கள் அனைவருக்கும் மதிய உணவு வழங்கப்பட்டது.

***3.3. பெண்கள் தினக்கொண்டாட்டம்:***

10.03.2017 அன்று ஆத்தூர் பகுதியில் பெண்கள் தினமானது **“பாலியல் வன்கொடுமை”** மற்றும் **“மாறிவரும் உலகில் உழைக்கும் பெண்கள்”** என்ற தலைப்பில் கொண்டாடப்பட்டது. இந்நிகழ்ச்சியின் துவக்கமாக கெங்கவல்லி, ஆத்தூர் மற்றும் தலைவாசல் ஆகிய ஒன்றியத்தில் இருந்து சுய உதவி குழு பெண்கள் ஆத்தூர் பேருந்து நிலையம் முதல் புனித ஜெயராக்கினி அன்னை ஆலயம் வரை பேரணியாக சென்றனர். இப்பேரணியை ஆத்தூர் பங்குத்தந்தை அருட்பணி. அருள் பிரான்சிஸ் அவர்கள் கொடியசைத்து துவக்கிவைத்தார். அதனைத் தொடர்ந்து சிறப்பு பொதுக்கூட்டமானது ஆலய வளாகத்தில் நடைபெற்றது. சேலம் சமூக சேவை சங்கத்தின் இயக்குனர் அருட்பணி. ஆரோக்கியசாமி அவர்கள், ஆத்தூர் மறைவட்ட பங்குதந்தை அருட்பணி. அருள் பிரான்சிஸ் அவர்கள், காரிதாஸ் இந்தியா மாநில அலுவலர் திருமிகு. ஜான் ஆரோக்கியராஜ் அவர்கள், ஆத்தூர் அரசு மருத்துவமனை மருத்துவர் டாக்டர். மல்லிகா மனோகர் அவர்கள் மற்றும் சேலம் ஜனநாயக மாதர் சங்க நிர்வாகி திருமதி. ஜோதிலட்சுமி ஆகியோர் இப்பொதுக்கூட்டத்திற்கு தலைமை ஏற்றனர். டாக்டர். மல்லிகா மனோகர் அவர்கள் மாறிவரும் உலகில் உழைக்கும் பெண்கள் என்ற தலைப்பில் கருத்துரை வழங்கினார். திருமிகு. ஜோதிலட்சுமி அவர்கள் பாலியல் வன்கொடுமை என்ற தலைப்பில் கருத்துரை வழங்கினார். இதில் பணியாளர்கள், களப்பணியாளர்கள் மற்றும் சுய உதவி குழு உறுப்பினர்கள் உட்பட 330 பேர் கலந்துகொண்டனர். பெண்கள் தினத்திற்கு வருகை தந்த அனைவருக்கும் வாழ்த்து கூறி நாட்டுபண்ணுடன் விழா நிறைவடைந்தது. பங்கேற்பாளர்கள் அனைவருக்கும் மதிய உணவு வழங்கப்பட்டது.



# 4. முக்கிய தின அனுசரிப்புகள்

### *4.1. உலக கழிவறை தினம் மற்றும் உலக நீரிழிவு நோய் தினம்:*

10.11.2016 அன்று கோனேரிப்பட்டி கிராமத்தில் உலக கழிவறை தினம் மற்றும் உலக நீரிழிவு தினம் அனுசரிக்கப்பட்டது. கோனேரிப்பட்டி பங்குத்தந்தை அருட்பணி. ஜான் அல்போன்ஸ் அவர்கள் விழிப்புணர்வு ஊர்வலத்தை துவக்கிவைத்தார். இவ்வூர்வலத்தில் சுய உதவிக் குழு மக்கள் விழிப்புணர்வு கை - பதாகைகள் ஏந்தியும் கழிவறையின் அவசியம் குறித்து கோஷமிட்டும் கோனேரிப்பட்டி தெருக்களை சுற்றி வந்தனர். அதன் பிறகு பொதுக்கூட்டமானது சமுதாய நலக் கூடத்தில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் அருட்சகோதரி. கிளமன்ஸ் (குளுனி கன்னியர் இல்லம், கோனேரிப்பட்டி), திரு. அருள்மணி (STLS-அரசு மருத்துவமனை, தம்மம்பட்டி), திருமதி. சுமதி (Staff Nurse-அரசு மருத்துவமனை, தம்மம்பட்டி), திருமதி. முத்தமிழ்செல்வி (ICTC -ஆலோசகர்,அரசு மருத்துவமனை, தம்மம்பட்டி) ஆகியோர் கலந்து கொண்டு உடல் நலம் குறித்த பல்வேறு தலைப்புகளில் கருத்துரை ஆற்றினார்கள். அதனை தொடர்ந்து அனைத்து உறுப்பினர்களுக்கும் சர்க்கரைநோய், இரத்த அழுத்தம் மற்றும் காசநோய்கான இலவச பரிசோதனை முகாம் நடத்தப்பட்டது. இந்த அனுசரிப்பில் சேலம் சமூக சேவை சங்கத்தின் பணியாளர்கள், களப்பணியாளர்கள் மற்றும் சுய உதவி குழு உறுப்பினர்கள் 175 பேர் கலந்து கொண்டனர். பங்கேற்பாளர்கள் அனைவருக்கும் மதிய உணவு வழங்கப்பட்டது.

### *4.2. உலக காசநோய் தினம்:*

24.03.2017 அன்று உலக காசநோய் தினமானது சேலம் மாவட்ட ஆட்சியர் தலைமையில் அனுசரிக்கப்பட்டது. இந்நிகழ்வின் தொடக்கமாக காசநோய் ஒழிப்பு உறுதிமொழி எடுக்கப்பட்டது. காசநோய்கான விழிப்புணர்வு CD வெளியிடப்பட்டது. காசநோய் பணியில் சிறப்பாக பணியாற்றியதற்காக அருட்தந்தை. ஆரோக்கியசாமி அவர்களுக்கு நினைவு பரிசு மற்றும் சான்றிதழ் வழங்கப்பட்டது. அதன்பின் காசநோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு ஊட்டச்சத்து பொருட்கள் வழங்கப்பட்டது. பின்னர் சேலம் மாவட்ட ஆட்சியர் திருமிகு. சம்பத் குமார் அவர்கள் கொடியசைத்து விழிப்புணர்வு பேரணியைத் துவக்கி வைத்தார். பேரணியானது மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் இருந்து திருவள்ளுவர் சிலை வழியாக சேலம் அரசு மருத்துவமனையை வந்தடைந்தது. பேரணியின்போது மாணவர்கள் விழிப்புணர்வு கை - பதாகைகள் ஏந்தியும், கோஷமிட்டும் பொதுமக்களுக்கு துண்டுபிரசுரங்கள் வழங்கியும் காசநோய் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தினர். இதில் பள்ளி மாணவ, மாணவிகள், கல்லூரி மாணவ மாணவிகள், ஆசிரியர்கள், மருத்துவர்கள் மற்றும் தன்னார்வாளர்கள் உட்பட 500 பேர் கலந்து கொண்டனர்.

## 5. சிறப்பு நிகழ்வுகள்

### 5.1. காரிதாஸ் இந்தியா ! உதயம் ECO DRR திட்ட துவக்கவிழா:

இத்திட்டம் காரிதாஸ் இந்தியா நிறுவனமும் சேலம் சமூக சேவை சங்கமும் இணைந்து செயல்படுத்துகின்ற திட்டமாகும். இத்திட்டத்தின் துவக்க விழாவானது 25.08.2016 அன்று சேலம் சமூக சேவை சங்கத்தில் நடைப்பெற்றது. இந்நிகழ்ச்சியில் சேலம் மறைமாவட்ட ஆயர் மேதகு.செ.சிங்கராயன் அவர்கள் தலைமை தாங்கி சிறப்புரை ஆற்றினார். மேலும், காரிதாஸ் இந்தியா நிறுவனத்தின் மாநில அலுவலர் திருமிகு. ஜான் ஆரோக்கியராஜ் அவர்கள், சேலம் மாவட்ட தாசில்தார் திருமிகு. பெலிக்ஸ் அவர்கள், காசநோய் மருத்துவ மேளாலர் திருமிகு. டாக்டர். கனேஷ் குமார் அவர்கள், சேலம் மாவட்ட நலவாரிய அலுவலர் திருமதி. பரிமளாதேவி ஆகியோர் கலந்துகொண்டு வாழ்த்துரை வழங்கினர்.

காசநோயால் பாதிக்கப்பட்ட மிகவும் நலிவுற்ற காசநோயாளிகளுக்கு உடல் நலம் சீரடைய ஊட்டச்சத்து பொருட்கள் வழங்கப்பட்டது. இந்நிகழ்ச்சிக்கு வந்திருந்த அனைவருக்கும் சேலம் சமூக சேவை சங்கத்தின் இயக்குனர், அருட்தந்தை. ஆரோக்கியசாமி, அவர்கள் நன்றி கூறினார். பங்கேற்பாளர்கள் அனைவருக்கும் மதிய உணவு வழங்கப்பட்டது.

### 5.2. பிளாஸ்டிக் பயன்பாட்டை தவிர்த்தல் பற்றிய விழிப்புணர்வு:

06.04.2017 அன்று பிளாஸ்டிக் பயன்பாட்டை தவிர்க்க பள்ளி மாணவர்களை கொண்டு விழிப்புணர்வு பேரணியானது கோனேரிப்பட்டி கிராமத்தில் நடத்தப்பட்டது. அதன் துவக்கமாக பிளாஸ்டிக் பயன்பாட்டின் விளைவுகள் குறித்த துண்டுபிரசுரத்தை சேலம் சமூக சேவை சங்கத்தின் இயக்குனர் அருட்தந்தை. ஆரோக்கியசாமி அவர்கள் வெளியிட பிரசுரத்தின் முதல் பிரதியை கோனேரிப்பட்டி RC நடு நிலை பள்ளியின் தலைமை ஆசிரியர் திரு. ஜான் சேவியர் அவர்கள் பெற்றுக்கொண்டார். அதன் பின் பேரணியை அருட்தந்தை. ஆரோக்கியசாமி, அவர்கள் கொடியசைத்துத் துவக்கிவைத்தார். பேரணியின்போது மாணவர்கள் விழிப்புணர்வு கை - பதாகைகள் ஏந்தியும், கோஷமிட்டும் பொதுமக்களுக்கு துண்டுபிரசுரங்கள் வழங்கியும் பிளாஸ்டிக் பயன்பாட்டை தவிர்க்க விழிப்புணர்வை ஏற்படுத்தினர். இந்நிகழ்வில் அலுவலக பணியாளர்கள், களப்பணியாளர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் சுய உதவி குழு மக்கள் கலந்துகொண்டனர்.

***5.3. தீயணைப்பு மற்றும் தீ தடுக்கும் முறை பற்றிய விழிப்புணர்வு:***

- தீயனைப்பு மற்றும் தீ தடுப்புமுறைகள் பற்றிய விழிப்புணர்வு ஆத்தூர் மற்றும் கெங்கவல்லி பகுதியில் நடைபெற்றது.
- திரு. கோவிந்தன் (தீயணைப்பு அலுவலர் ஆத்தூர் வட்டம்) நரசிங்கபுரம் கிராமத்தில் உள்ள மக்களுக்கு தீவிபத்து ஏற்படக் காரணங்கள் மற்றும் வீட்டில் அன்றாடம் நாம் செய்யும் வேலைகளில் தவிர்க்க வேண்டிய சில விஷயங்கள் பற்றி மக்களுக்கு கூறினார்.
- கெங்கவல்லி பகுதியில் உள்ள மக்களுக்கு கெங்கவல்லி தீயணைப்பு நிலையத்தில் விழிப்புணர்வு அளிக்கப்பட்டது. இதில் திரு. காசிராஜன், (தீயணைப்பு அலுவலர், கெங்கவல்லி) அவர்கள் மக்களுக்கு தீயணைப்பு முறைகள், தீவிபத்து ஏற்படாமல் தடுக்க செய்ய வேண்டிய வழிமுறைகள் மற்றும் விபத்து ஏற்படின் நாம் செய்யவேண்டியவை குறித்து விவரித்தார். மேலும் தீயணைப்பு வாகனத்தில் உள்ள கருவிகள் மற்றும் பொருட்களை மக்களுக்கு காண்பித்து விளக்கமளிக்கப்பட்டது. இதில் 127 பேர் கலந்துக்கொண்டனர்.

## 6. பொதுக்குழு உறுப்பினர்கள்

| வ.எண் | பெயர் | பொறுப்பு | இடம் |
|---|---|---|---|
| 1 | மேதகு. ஆயர். செ. சிங்கராயன் | தலைவர் | ஆயர் இல்லம் மரவனேரி |
| 2 | அருட்தந்தை . ஜான் ஜோசப் | துணை தலைவர் | ஆயர் இல்லம் மரவனேரி |
| 3 | அருட்தந்தை. ஆரோக்கிய சாமி | இயக்குனர் | சேலம் சமுக சேவை சங்கம் |
| 4 | அருட்தந்தை. எட்வர்ட் ராஜன் | உறுப்பினர் | ஆயர் இல்லம் மரவனேரி |
| 5 | அருட்தந்தை. இருதய செல்வம் | உறுப்பினர் | சூரமங்கலம் |
| 6 | அருட்தந்தை. குருசடி சகாயராஜ் | உறுப்பினர் | சடையம்பாளையம் |
| 7 | அருட்தந்தை. கிரகோரி ராஜன் | உறுப்பினர் | அரிசிபாளையம் |
| 8 | அருட்சகோதரி. பவுலின் | உறுப்பினர் | க்ளூனி கான்வென்ட் |
| 9 | திரு. திவ்யநாதன் | உறுப்பினர் | அரிசிப்பாளையம் |

## 7. பணியாளர்கள் விவரம்

| வ.எண் | பெயர் | பொறுப்பு | இடம் |
|---|---|---|---|
| 1 | அருட்தந்தை. ஆரோக்கியசாமி | இயக்குனர் | SSSS. சேலம் |
| 2 | திருமதி. டாரத்தி ரூபன் | திட்ட ஒருங்கிணைப்பாளர் | SSSS. சேலம் |
| 3 | திரு. ஆரோக்கிய ராஜ் | கணக்காளர் | SSSS. சேலம் |
| 4 | திருமதி. கிறிஸ்டினா | திட்ட ஒருங்கிணைப்பாளர் | SSSS. சேலம் |
| 5 | செல்வி. காயத்ரி | திட்ட ஒருங்கிணைப்பாளர் | SSSS. சேலம் |
| 6 | திரு. வின்சென்ட் மாணிக்க ராஜ் | திட்ட ஒருங்கிணைப்பாளர் | SSSS. சேலம் |
| 7 | திருமதி. கீதா லட்சுமி | திட்ட ஒருங்கிணைப்பாளர் | SSSS. சேலம் |
| 8 | திருமதி. மரிய தெரசா | களப்பணியாளர் | தம்மம்பட்டி |
| 9 | திருமதி. பவுலின் | களப்பணியாளர் | ஆத்தூர் |
| 10 | திருமதி. ராணிசம்பத் | களப்பணியாளர் | கெங்கவல்லி |
| 11 | திருமதி. இந்திரா காந்தி | களப்பணியாளர் | ஆத்தூர் |
| 12 | திருமதி. ஆரோக்கிய மேரி | களப்பணியாளர் | சேலம் |
| 13 | திருமதி. பாப்பாத்தி | களப்பணியாளர் | தலைவாசல் |
| 14 | திருமதி. அமுதவல்லி | களப்பணியாளர் | வீரகனூர் |
| 15 | திருமதி. தீபா | களப்பணியாளர் | மேச்சேரி |
| 16 | திருமதி. தெய்வானை | களப்பணியாளர் | சேலம் |
| 17 | திரு. பூபதி ராஜா | களப்பணியாளர் | மேட்டூர் |

| | | | |
|---|---|---|---|
| 18 | திரு. சுகிர்தன் | களப்பணியாளர் | ஏற்காடு |
| 19 | திரு. காணிக்கராஜ் | ஓட்டுநர் | SSSS. சேலம் |
| 20 | திருமதி. நிர்மலா | துப்புரவு பணியாளர் | SSSS. சேலம் |
| 21 | திருமதி. நாட்டாயி | துப்புரவு பணியாளர் | SSSS. சேலம் |
| 22 | திரு. பொண்ணு சாமி | பண்ணை பணியாளர் | SSSS. சேலம் |
| 23 | திரு. ஆரோக்கியசாமி | பண்ணை பணியாளர் | SSSS. சேலம் |






SALEM SOCIAL SERVICE SOCIETY

## சேலம் சமூக சேவை சங்கம்

பதிவெண்: 12/1968
19/4, கான்வென்ட் ரோடு, அழகாபுரம்,
சேலம் – 636016.